**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ஓ.மு.எண்.5188/ஆ5/2025, நாள்.15.10.2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – தீபாவளி 2025 மகிழ்ச்சியாக கொண்டாடுதல் – தீபாவளி பண்டிகையின்போது தீ விபத்து ஏற்படாமல் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுதல் – தொடர்பாக

பார்வை சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.066717/எம்2/இ2/2025, நாள். 13.10.2025

•••••

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில், தீபாவளி பண்டிகை 20.10.2025 அன்று கொண்டாடப்பட உள்ளது. இத்தகைய மகிழ்ச்சியான நன்னாளில் சில இடங்களில் கவனக் குறைவாக பட்டாசு வெடிப்பதால் தீ விபத்து ஏற்பட்டு குடிசைப் பகுதிகளில் உயிர் மற்றும் பொருட்சேதங்கள் ஏற்படுகிறது. மேலும் சிறார்களுக்கு தீக்காயங்களும் சில நேரங்களில் பார்வை இழப்பும் ஏற்படுகிறது. இத்தகைய நிகழ்வுகளை தவிர்ப்பதும் தடுப்பதும் நமது முக்கிய கடமையாகும்.

தீபாவளி நன்னாளில் சிறியவர்களும், பெரியவர்களும் பட்டாசு பயன்படுத்தும் வேளையில் முறையாக, கவனமாக பட்டாசுகளை வெடிக்க வேண்டும். கவனக்குறைவு காரணமாக தீ விபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதால், விபத்துகள் அற்ற மகிழ்ச்சி நிறைந்த தீபாவளி கொண்டா கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- ➢ பட்டாசுகளை கொளுத்தும்போது தளர்வான ஆடைகள் உடுத்துவதை தவிருங்கள், டெரிகாட்டன் / டெரிலின் ஆகிய எளிதில் தீ பற்றக்கூடிய ஆடைகளை அணியக்கூடாது.
- ➢ பட்டாசுகள் கொளுத்துமிடத்திற்கு அருகாமையில் ஒரு வாளி தண்ணீர் வைத்துக்கொள்ளுங்கள்.
- ➢ பட்டாசுகளை கொளுத்தி கையில் வைத்துக்கொண்டோ அல்லது உடலுக்கு அருகாமையிலோ வெடிக்க வேண்டாம். மாறாக பாதுகாப்பாக தொலைவில் வைத்தே வெடியுங்கள்.
- ➢ மூடிய பெட்டிகளில் / பாட்டில்களில் பட்டாசுகளை உள்ளிட்டு கொளுத்தி வெடிக்க செய்யாதீர்கள்.
- ➢ ராக்கெட்டுகளை வெட்ட வெளியில் குடிசைகள் இல்லாத பகுதிகளில் மட்டுமே செலுத்துங்கள்.
- ➢ பட்டாசுகளை கூட்டமான பகுதிகளிலும் தெருக்களிலும் மற்றும் சாலைகளிலும் வெடிக்காதீர்கள்.
- ➢ பட்டாசுகளை விற்பனை செய்யும் கடைக்கு முன்னரோ அருகிலோ வெடிக்காதீர்கள்.
- ➢ குழந்தைகள் பட்டாசுகளை பெற்றோர்களின் முன்னிலையில் அவர்களது பாதுகாப்பின் கீழ் வெடிக்க வேண்டும்.
- ➢ நோயாளர்கள் சிகிச்சை பெற்று வரும் மருத்துவமனைக்கு அருகாமையில் பட்டாசுகளை வெடிக்காதீர்கள்.
- ➢ விலங்குகளை துன்புறுத்தும் வகையிலும் அவைகள் பயப்படும் வகையிலும் பட்டாசுகளை வெடிக்காதீர்கள்.
- ➢ பெட்ரோல் சேமித்து வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு அருகாமையில் பட்டாசுகளை வெடிக்கவோ கொளுத்தவோ செய்யாதீர்கள்.
- ➢ இரவு 10.00 மணி முதல் காலை 6.00 மணி வரை பட்டாசுகளை வெடிக்காதீர்கள்.

- அதிக சப்தமுள்ள பட்டாசுகளை வெடிக்க வேண்டாம். ஏனெனில் அது உடலையும் மனநிலையும் பாதிக்கும். காதுகள் செவிடாகக் கூடும். ஒருநாள் கொண்டாடத்திற்காக வாழ்நாள் முழுவதும் துன்பப்பட வேண்டாம்.
- குழந்தைகள் மற்றும் வயதானோர் இருக்கும் இடங்களில் பட்டாசுகளை வெடிக்க வேண்டாம்.

பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு மேற்கண்டவாறு அறிவுரை வழங்க அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

சென்ற ஆண்டைப் போன்றே இவ்வாண்டும் கீழ்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி செயல்படுத்தி மகிழ்ச்சி நிறைந்த விபத்தற்ற தீபாவளியாக கொண்டாடும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும்.

- தலைமையாசிரியர்கள் பள்ளியின் காலை இறைவணக்கத்திற்கு பிறகோ அல்லது அணி திரளும்போதோ தோராயமாக 5 நிமிடங்களுக்கு தீபாவளி பண்டிகைக்கு முன்னதாக தீ பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விரைவுயாற்ற வேண்டும்.
- மாணவர்களிடையே தீபாவளி பண்டிகையினை விபத்தில்லா வகையில் எவ்வாறு கொண்டாடுவது என்பது குறித்து அவர்களது அறிவுக்கூர்மையை சோதித்து பார்த்தல் வேண்டும்.
- ஒரு குறிப்பிட்ட இடைவெளி தருணத்தில் 5லிருந்து 10 நிமிடம் தீ பாதுகாப்பு செய்திகள் குறித்து சிலேடை நிகழ்ச்சி நடத்துதல் வேண்டும்.
- தீ பாதுகாப்பு குறித்து வரைபட போட்டி நடத்தி சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்படும் வரைபடத்திற்கு பரிசளித்தல் வேண்டும்.
- வெடிக்காத பட்டாசுகளை குனிந்து பரிசோதிப்பதை தவிர்த்தல் வேண்டும்.
- விவரம் அறியாத இளஞ்சிறார்களை வெடிகளைக் கொளுத்த அனுமதிக்காமல் இருத்தல் வேண்டும்.

தீபாவளி சமயத்தில், மேற்படி நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் தீ பாதுகாப்பு குறித்து பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை குறித்தான பல நல்ல கருத்துக்களை மனதில் நன்கு பதிய வைத்து 20.10.2025 அன்று கொண்டாடப்படவுள்ள தீபாவளியின் போது மாணவ / மாணவிகள் பாதுகாப்பு வழிமுறைகள் அவர்களே செயல்படுத்திட ஏதுவாக உரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து வகை தொடக்க / நடுநிலை / உயர்நிலை/ மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு அறிவுறுத்துமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வையின் கடித நகல்

15.10.25

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. அனைத்து வகை தொடக்க / நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / தனியார் பள்ளி முதல்வர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்–
பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.